
காவடிச்சிந்து
SUN OF INDIA PRESS CHOOLAI MADRAS

உ

சென்னிகுளம்-வித்வான்

அண்ணாமலை ரெட்டியார் இயற்றிய

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிபேரில்

# காவடிச்சிந்து




பதிப்பாளர்:

K. A. மதுரை முதலியார்

ஷண்முகானந்த புத்தகசாலை,

பார்க்டவுன் சென்னை-3.

இதன் விலை] 1962 [ந. பை. 25

வேலுமயிலுந் துணை.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிபேரில்

# காவடிச்சிந்து

இராகம் - நாட்டை. தாளம் - சாப்பு

திருவுற் றிலகுசங்கை வரையிற் புகழ்மிகுந்து
திகழுத்தின முறைந்த வாசனை மிகு
மகிமைச்சுகிர்த தொண்டர் நேசனை பல
தீயபாதக காரராகிய சூரர்யாவரு மாளவேசெய்து
சிகரக்கிரி பிளந்த வேலனை யுமை
தகரக்குழல் கொள்வஞ்சி பாலனை
மருவுற் றிணர்விரிந்து மதுபக் குலமுழங்க
மதுமொய்த் திழிகடம்ப வாரனை விக்
சிதசித்திர சிகியுந்து வீரனை எழில்
மாகநாகுக மாரியாகிய மாதினேடுகி ராதநாயகி
மருவப் புளகரும்பு தோளனை எனை
யருமைப் பணிகொளுந்தே யாளனை
தெரிதற் கரியமந்தி ரமதைத் தனதுதந்தை
செவியுட் புகமொழிந்த வாயனை யிள
ரவியிற் கதிர்சிறந்த காயனை யகன்
மறேவநாடு கெடாதுநீடிய சேனைகாவல னுகவேவரு
திறலுற்ற சிவகந்த நாதனை விரி
மறையத் தொளிருகின்ற பாதனை
யருளற் றிடநினைந்து மனதிற் கனிசிறந்து
மதுரக் கனிவுவந்து கூடவே பல
விழுதற் றிலகுசிந்து பாடவே யிலை
வாரிநீரினை வாரியேல்வரு மாரிநேர் தரு மாமதாசல
வதனப் பணிரெண்டு தாளையே நமக்
குதவப் பணிவமிந்த வேளையே (1)

முருகன் துதி

வேறு

இராகம் - நாதநாமக்கிரியை, தாளம் - சாப்பு

சீர்வளர் பசுந்தோகை மயிலாள் வள்
செவ்விதழ லாதினிய ஒயிலாள்

* சிகி - மயில்

பார்வளர் தடங்கையுறு மயிலான் விமல
பொன்னடியை யின்னலுற வுன்னுதல் செய்வாமே
ஞ்சர வனங்காவல் விடா தபடி
கொஞ்சிமரு வுஞ்சரச ரஞ்சிதவி சோடா
பைஞ்சர வனங்காமல் வீடா வளரும்
பாலனென மாலையொடு காலநிலை வாமே
லவுணர் வழியாதும் விட்டு வெருள்
வன்சமர்செய் கந்தனிடம் வடி யடுமை பட்டு
கல்லவுணர் வழியாது மட்டு மிஞ்சு
ஞானபர மானந்த மோனமடை வாமே
ஒருதங்க மாதங்க முகத்தான் திகழ்
உத்தமர்க ளிட்டனென வுற்றிடு மகத்தான்
வருதந்த மாதங்க முகத்தான் எவரும்
வாழ்த்துருக நாயகனை யேத்துதல் செய்வோமே. (2)

கழுகுமலை நகர்வளம்

வேறு

இராகம் - காபி, தாளம் - ஆதி

தெள்ளுதமி ழுக்குதவு சிவன் தமிழ்
செப்பண்ணு மலைக்குமனு கூலன் வளர்
செழியப் புகழ்விளைத்த கழுகுமலை வளத்தைத்
தேனே சொல்லு வேனே
வெள்ளிமலை யொத்தபல மேடை முடி
மீதினிலே கட்டுகொடி யாடை யாந்த
வெய்யவ னடத்திவருந் துய்யவிரதப்பரியும்
விலகும் படி யிலகும்
வீதிதொரு மாதிமறை வேதம் சிவ
வேதியர்க ளோதுசாம கீதம் அதை
மின்னுமலர்க் காவதனிற் றுன்னும்டப் பூவையுடன்
விள்ளும் கிள்ளைப் புள்ளும்
சீதள முகிற்றுவளை கூறும் நின்று
சிந்துரங்கள் சிந்துமதத் தாறும் உயிர்
சித்திர நிகர்த்த மின்னார் பற்றிபூசுங் குங்குமச்
சேறுங் காத நாறும்
த்தநித்த முங்கணவ ரோடுங் கூடி
நேசத்தாற் பிணங்கிமனம் வாடும் கரு
நீலவிழி யார்வெருத்த கோலமணி மாலைரத்ன
நெருங்கும் மெத்த மருங்கும்

கத்துகட லொத்தகடை வீதி முன்பு
கட்டுதர ளப்பந்தலின் சோதி எங்கும்
கட்டுவதா லிரண்டும் கோட்டுமத யானையின்
களிறும் நிறம் வெளிறும்
முத்தமிழ் சேர் வித்வஜனக் கூட்டம் கலை
முற்றிலு முணர்ந்திடுங்கொண் டாட்டம் கெஞ்சில்
முன்னுகின்ற போதுதொறுந் தென்மலையின் மேவுகுறு
முனிக்கும் அஞ்சஞ் சனிக்கும்
எத்திசையும் போற்றுமை ரூரும் அதில்
இந்திரன் கொலுவிருக்குஞ் சீரும் மெச்சு
மிந்தநக ரந்தனைய டைந்தவர்க் கதுவும்வெறுத்
திருக்கும் அரு வருக்கும்
துள்ளிவெழு வெள்ளிமலை மடங்கும் படி
சுற்றிலும் வளைந்தவகழ்ந் திடங்கும் பல்
சொர்னமலை போன்மதிலு மின்னுவதி னலேபுகழ்
தோன்றும் லோக மூன்றும்
கள்ளவிழ் கடப்பமலர் வாகன் குறக்
கன்னியை விரும்பிடும்வி னோதன் வளர்
கழுகுமலை நகரின் வளமையென் னவிலடங்
காதே மடமாதே (3)

## கோயில் வளம்

## வேறு

இராகம் — கமாஸ், தாளம் — ருபகம்

சென்னி குளநகர் வாசன் தமிழ்
தேறும் அண்ணாமலை தாசன் செய்யுஞ்
செகமெச்சிய மதுரக்கவி யதனைப்புய வரையிற்புனை
தீரன் அயில்வீரன்
வன்ன மயில்முரு கேசன் குற
வள்ளி பதம்பணி நேசன் உயிர்
வரமேதரு கழுகாசல பதிகோயிலின் வளநான்மற
வாதே சொல்வேன் மாதே
கோபுரத்துத் தங்கத் தூவி தேவ
கோபுரத்துக் கப்பால் மேவி கண்ச
கூசப்பிர காசத்தொளி மாசற்றுவி லாசத்தொடு
குலவும் புவி பலவும

நூபுரத்தொனி வெடிக்கும் பத
நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் அங்கே
நுழைவாரிடு மூழவோசைகள் திசைமாசுன மிடிவோமென
நோக்கும் படி தாக்கும்
சந்நிதியிற் றுஜஸ் தம்பம் விண்ணிற்
ருவிவருகின்ற கும்பம் எனுஞ்
சலராசியை வடியார்பல கொடியீடிய முடிமீதிலே
தாங்கும் உயர்ந்தோங்கும்

உன்னதமாகிய் விஞ்சி மொன்னுட்
டும்பர் நகருக்கு மிஞ்சி மிக
வுயர்வானது பெறலாமதில் அதிசீதன புயல்சாலவு
முறங்கும் மின்னிக் கறங்கும்
அருணகிரி நாவிற் பழக்கம் தரு
மந்தத் திருப்புகழ் முழக்கம் பல
வடியார்கண மொழியோதினி லமராபதி யிமையோர்செவி
யடக்கும் அண்டம் உடைக்கும்

கருணை முருகனைப் போற்றித் தங்கக்
காவடி தோளின்மே லேற்றிக் கொழுங்
கனலேறிய மெழுகாய்வரு பலரேவரு மிகவேகதி
காண்பார் இன்பம் பூண்பார் (4)

கழுகுமலை வளம்

வேறு

இந்துஸ்தான் காபி, தாளம் - காப்பு

பொன்னுலவு சென்னிகுல நன்னகரண் ணுமலைதன்
புத்தியின் மகிழ்ந்துதித்தம் நின்றவன் முந்தி
வெந்திற லரக்கர்களை வென்றவன் மயில்
போலவேனலின் மீதுலாவுதி ராதமாதுமு னேகியேயடி
பூவையே யுனதுதஞ்ச நின்றவன்
மின்னுலவு சொன்னமுடி சென்னியணி விண்ணவர்தே
வேந்திரனுஞ் சித்தர்களுக் குன்னியே கதி
வேண்டியே யகத்திலன்பு மன்னியே பணி
வேலவன்கிருபர்கரன்குகன் மேவிநின்கழு காசலந்தனில்
மிஞ்சியே வளங்களையா னுன்னியே சொல்
ரஞ்சிதமாய் கேளடிவிற் பன்னியே

மூசுவண்டுவாசமண்டுக வின்மண்டு தேனையுண்டு
மோகன முகாரிராகம் பாடுமே மைய
லாகவே பெடையுடனே நாடுமே யலை
மோதுவாரிது நீரவாரிவிண் மீதுலாகிய சீதளாகர
முகில்பெருஞ் சிகரமுற்று மூடுமே கண்டு
மயிலினஞ் சிரகைவிரித் தாடுமே
தேசுகொண்ட பாரதந்த வீரதும்பி யாகியண்டர்
தேவதாரு வைக்கரத்தாற் பிடிக்குமே சற்று
மேவிய கிளையைவளைத் தொடிக்குமே யொளிர்
யேசந்திர னோடுரிஞ்சுப லாமரங்களி லேநெருங்கிய
திங்கனி மதுரசத்தை வடிக்குமே வந்தி
பாங்கினின் றதனையள்ளிக் குடிக்குமே
அந்தர முருவிவளர்ந் திந்திர னுலகுகடந்
தப்புறப்போய் நின்றசையும் சந்தன மரந்
தப்பித மிலாகுகையால் வந்தன மெங்க
ளாறுமாமுக நாதனுக்கிடு மாரிமேல்வி சாகமுற்றகண்
டத்தனையு நின்றுதலை சாய்க்குமே மண்டப்
பித்தகை தனிலுஞ்சென்று தேய்க்குமே
கந்தரத்தொ றங்கிடந்து கந்தரப்ப யந்தொதுங்கக்
கர்ச்சனை புரியுந்திறற் சிங்கமே நெஞ்சி
லச்சமுற விண்ணுறைமா தங்கமே தடங்
கவிலேசில தாவிலேவளர் மாவிருனடு வேகிராதர்கள்
கார்முகமே ரிங்கணைக ளேறுமே யதில்
வார்மதுவால் வாரியுவர் மாறுமே
காலவடி வேனெடிய வாள்கொடிய நாகமுகிழ்
காரிபிணை வாரிகளை பானலே யன்ன
கூர்நயன வேடருன்ற னேனலே காக்குங்
காளைமேலேறி வோதுவார்கவ ணோடுமாமணி தேசுவீசவே
கதிரவன்ற னதுமுகனு சுழிக்குமே யவன்
குதிரையுங் கண்ணைச்சுருக்கி விழிக்குமே
ஒலமலி கோலநிலை வேலைசூல ஞானமீதி
லுற்றவரின் பத்துடனே மானமே சொல்ல
வைத்தபல சித்திரசோ பானமே யென்ன
ஒங்குகோங்ககி லுங்கிலாங்கலி பாங்குநீங்கருவேங்கைமூங்கமு
யொன்றோடொன் றுவமபுகொண்டு மீளுமே கொள்கள
சென்றுசென்று நின்றுநின்று மீளுமே (5)

## வாவி வளம்

### வேறு

இராகம்-ஆனந்தபைரவி அடதாளம்

புள்ளிக் கலாபமயிற் பாகன் சக்தி
புதல்வனான கன யோகன் மலை
போலத்தான் இரண்டுகோலப்பன்னிரண்டுளாகன்நல்வி வேக
வள்ளிக்கிசைந்த முரு கேசன் அண்ணா
மலைக்கவிராஜன் மகிழ் நேசன் என்றும்
வாழுங்கழுகுமலைவாவளஞ்சொல்வேன்மாதேகேளிப்போதே
வெள்ளை நாரைகொத்தும் வேளை தப்பி
மேற்கொண்டெழுந்துசுன வாளை கதி
மீறிப்பாயுந்தோறுங்கிரிச்சாயுந்தென்னம்பாளை யுடன்றுழை
தெள்ளும் பிள்ளையன்னப் பேடுக் மிக
செவலான துவு சூடும் பின்பு
தேகமலர்த்த விசிற் சாமத்தினில் நாடும் உறவாடும்
மின்னுக்குலவிமதி மாணும் வரி
வெள்ளிப்பணிலராகி தானும் மட
மின்னார்விழிகளென்னமின்னுகொண்டமுற்றுமானும்மடமானும்
வன்னத் தாமரையைக் கண்டு வாயின்
மதுரராகம் பாடிக் கொண்டு மதி
மயங்கியேட்டினுடன் முயங்கியேகிடக்குவண்டுகளையுண்டு
அந்தரத்துப் பெண்கள் நாடி யங்கு
மன்பாகவே விளை யாடி செல்லு
மன்னலார்நடக்குநன்லைடைகுறிகியன்னஞ்செல்லும்பின்னும்
மந்த மேதியுள்ளே யெட்டும் இனை
வாராலு மெழுந்துமே மூட்டும் போது
மடிசுரந்துகன்றுதனைநினைந்துகண்டமட்டும்பார்லைக்கொட்டும் (5)

### துதி - வேறு

இராகம் - பியாக், ஆதிதாளம்

மரகத விகசித வொளிதவ ழிருசிறை
மருவிய மயின்மிசை யனுதின முறைதரு வாரன் பவகாசன்
குரகத சாமணி வளிரத நடவித
குவலய சாதரனேனு மதனெனுமகிழ் கோலன் பரைபாலன்
பரபுர வணிகல கலவென வொலிபுரீ
பரிதியு தயமதி லவிழ்பறை மலர்மிக பாகன் குகநாதன்

திரிபுர மலையொரு நொடிதனி லெரிகொடு
சிறைவற நகைபுரி சிவன்மன மகிழுபவ தேசன் முருகேசன்
பதுமநி தியினொடு பணிலநி தியுமெழில்
பரவிய சுரவியு முரசர புரனமகிழ் பாகன் கன யோகன்
சததள நளிநத விசுமிசை வதியொரு
சதமுக விதிசிறை பதிலுற நிறுவிவு சாகன் தடவாகன்
குரைதிரை வரைநிரை புரகர வுலவிய
குரைவயி னடுவுரை நிருதரை முடுகிய கோபன் கமழ் நீபன்
பரைசிற பகவதி யுபிவிய சரவண
பவனறு முககுகன் மிசைமது ரிதகவி பாடுஞ் சுக நாடும் (7)

## துதி - வேறு

இராகம் - ஆனந்தபைரவி, சாப்புதாளம்

பவனகிரி யதலுட்டானே மன்னுமானே இந்த
பாழிலேயிலே யாமலின்புற நாளுமேயருள் மேவு
கண்கோடு பாராய் இன்னல் தீராய்

அவுணப்பாகையை முடித்தோனே புண்யவானே கதி
யாருமேதரு வாருமிங்கிலே யாதலாலருள் வாயினன்
புரியாதே பண்ணு சூதே

விரகப்பெரு விதனத்தாலே மண்ணின் மேலே
வீணிலேயுழ லாதுகந்தவி சாகனேபுரிநீயுன் வஞ்சமென்
மீதே யெண்ணிடாதே

நரகச்சமன் வருமப்போதே பின்னில்லாதே எந்த
நாளுமேமற வாதுநின் றுசிறு பாதமாகிய கீதபங்கய
நானே உன்னினேனே

நிமலப்பெரு மிதச்செவ்வாளே கென்னல்வேளே தொடு
நீடுபானம் தானமருண் டிடை வாடுமாதரி ணங்கோடா
வகை நீயே யெண்ணுவாயே

குமரிக் கெதியாறகானே நண்ணினேனே இதழ்
கோகிலாத தபோபலம்பெறு நீதாபாலக லாதுறைந்
தருள் கோவே யென்னுள் வாவா

திடமற்றவ னிடச்சேயே யனீயே உனை
சேவையேசெவி ஞானபண்டிதர் காவினாடினி
தாவிரந்திடுந்தேனே பொன்னனேனே (8)

## துதி - வேறு

### இராகம்-கனடா, ரூபகதாளம்

செந்தின்மாநகர்வாழ் கந்தநாதனிரு
செய்யபாத கஞ்சமே நமக்
குய்யமேவு தஞ்சமே யின்று
செப்புவது கொஞ்சமே கேட்கத்
தீயபாதகவி ரோதமாயம் விட்டு
திரும்புவாயே நெஞ்சமே
பந்தபாசமிதை எந்தவேளையிலும்
பார்க்கும்போது தொல்லையே யெல்
லார்க்குமாவ தில்லையே யொரு
பாரமேரு வில்லையே கையிற்
பற்று நாதன்மாது பெற்றநீதமீது
பணுவல்சூடு வல்லையே
மங்கைமார்கனிரு துங்க மானபொரு
வாரணக்கொள் கும்பமே முகம்
பூர்ணசந்திர விம்பமே முகம
மாசுணநீ தம்பமே தொடை
காரவேளரசு மண்டபத்தருகில்
வைத்த ரண்டு ஸ்ம்பமே
செங்கைசூரி யோதயங்குலாமலர்
சீதபத்ம தளமே வரை
யோது சொற்கள் குளமே யெழிற்
திவ்யபொற்ப வளமே யென்று
சித்தித் தாற்குமரன் கந்தப் பாதமலர்
சேர்வதெவ்வா றுளமே
வன்ன மானவிழி மின்னவே கடையில்
வக்ரதந்த சங்கமே கொண்ட
வுக்ரதுங்க சிங்கமே யென்ன
மறலிதூதர் பொங்கமே யுற்று
வந்தவேனை நெஞ்சம் கந்தம் வேளை நினை
மருவுறுது பங்கமே
சென்னிமாநக ரண்ணமலைக்கவிஞன்
தேசமெங்கு மிசையே பெறப்
பேசுகந்த இசையே சற்கந்
தீர்ந்திடாத நசையே வைத்துச்
சேவலாளிபத மாவலோடு பணி
தினமுநாறு விசையே (9)

காவடிச்சிந்து

சுரம்போக்கும் நற்றூயிராங்கள்

வேறு

இராகம் - பைரவி, அடதாளம்

பாதிராத்ரி வேளையில் வீட்டுப்
பக்கத்தில் வந்து மேவி பஞ்ச
பாதகனொரு பாவி சிறு
பாவையை மெல்லக் கூவி கையைப்
பற்றிக் கூட்டிக்கொண்டேகினான் பதை
பதைக்குதே யெந்த னாவி
சோதனைப்பிர காரமா யென்னைத்
தொடர்ந்ததே பெருந் தோஷம் எவர்
சூதினால் வந்த மோசம் இனித்
தொலையுமோ பிள்ளைப் பாசம் சுற்றத்தார்
கண்டாலே அவர்
சொல்வரே பரி யாசம்
தேனிலங்கிய காவனந் திகழ்
சென்னிமாநகர் வாசன் துதி
செப்பும் அண்ணாமலை தாசன் செப்புஞ்
செந்தமிழ்க்கரு ணேசன் நாளும்
சிந்தனை செய்யுந் தொண்டர் தீவினை
தீர்த்திடு முரு கேசன்
நானிலம்புகழ் கழுமாமலை
நாயகன் பர்ண்டி நாட்டில் நெஞ்சில்
நாணம்விட்டுத் தன் பாட்டில் வெப்பம்
நண்ணியபாலை காட்டில் மகன்
நடக்கவேண்டிமுன் னடக்கமாய் தெய்வம்
லபித்ததோ மண்டை யோட்டில்
மையல்கொண்டொரு தையல்பின் சொல்ல
வயது மீறின மாதோ இந்த
மார்க்கந் தோன்றின தேதோ செனம
வாசனைப் பல னீதோ ஐயோ
மாதம் பத்துஞ் சுமந்து பெற்றவள்
வயிறுந் தானேரி யாதோ
செய்யபஞ்சனையும் பொறாது
சிவந்து கொப்பள மாகும் நெரிஞ்
சிப்பழமென்று நோகும் அவள்
சீறடி ரண்டும் வேகும் படி
தீயுங் கானலிற் வேனிலாந்
தீயிலேப்படி போகும்

தேடிஞங்கிடை யாததாகிய
திரவியக் கனு கூலம் போலே
செனித்த பெண்ணுக்குச் சீலம் வேறே
திரும்பின தென் காலம் கிரி
செய்தானோ யிந்த்ர ஜாலம்
காடுசேர்க்கையில் கரடிவேங்கைகள்
காட்டுமேயார வாரம் அதைக்
காதிற்கேட்க விசாரம் வைத்துக்
கலங்குவானந்த நேரம் என்றன்
காதலிதன்னை யாகரித்துயிர்
கர்ப்பது வேலன் பாரம் (10)

---

## தலைவி யிறங்கல்

### வேறு

இராகம் - சாவேரி, அடதாளம்

நேமமாயப்பணி யண்ணுமலைக்குதவு நீதனைக்
கழுகுமலை நாதனை நெஞ்சில்
நினைக்கநினைக்கமீறி எனைக்கொல்லுதேமன வேதனை
கோமளக்கடலிலே மிகுந்ததிரைக் கூட்டமே
அங்கமிலாண்போ ராட்டமே நாதன்
கோரமேவிளைத்தாற் றீருமோவெனக்கு வாட்டமே
வெள்ளத்திரையின்மேலே துள்ளத்திரியுஞ்சுறா மீனமே
இனியுமுண்டோ மானமே மன
தேக்கங்கொண்டதனை லேற்குதில்லையன்ன பானமே
அள்ளற்சுழி கனறயுண் மெள்ளக்குலவிவரு மாமையோ
கொடுமாசைத்தின திசையே நாளு
மதிகரித்திடலா லவமதிக்குதிந்தச் சீமையே
பொங்குமேதுலர்க ளெங்கும்பரிமளிக்கும் புன்னையே
பெற்று வளர்த்த வன்னையே எந்தப்
போதும்வைது மோதுகிருள்பாவி யன்னையே
தங்குநிலத்திலம்புரி யிங்கிதவலம்புரிச் சங்கமே
தென்றதுமொரு சிங்கமே போலத்
தாக்கவேமயங்கி யேக்கமாமெலிந்த னங்கமே
மங்கைமார்கள் தாங்கணேர்பவள வல்லியே
பிரியேனென்று சொல்லியே போன
வாசக்கடம்பன் வர நேசத்துடன் சொல்லுமோ பல்லியே
அங்கையத்தினிறைமங்கயத்துள்ளுறையன்னமே
பிரியம்வைத்து முன்னவே கண்டு
யன்றுவார்த்தைசொன்ன யாசைகாணேனையா யின்னிமே. (11)

## தலைவி ஊடல்

### வேறு

இராகம் - தேசியக்கொடி, ரூபகதாளம்

ஆறுமுகவடி வேலவனேகலி யாணமுஞ் செய்யவில்லை சற்று
மச்சமில்லாமலே கைச்சரசத்துக்கழைக்கிறு யென்ன தொல்லை
மீறியவன்பில்லாதபெண்ணோடே விளம்பாதவீண் பேச்சும்மா
வெள்ளைத்தனமாகத்துள்ளுகிறாய் நெஞ்சில்வெட்கமெங்கேபோ
மேட்டிமையென்னிடங் காட்டுகிறுயினி வேறிலையோஜோலி இதை
வீட்டிலுள்ளோர்கொஞ்சங் கெட்டுவிடலாது மெத்தமெத்தக் கேலி
தாட்டிகழு·சோகமு காசலமாங்கர் தங்குமுருகோனே இந்திர
ஜாலத்தினுலென்னைக் காலைப்பிடித்தாலுஞ் சம்மதியேன
அக்கரைக்காரருக்கு புத்திகொஞ்சமென்பா ராரும்பழமொழியே
அப்படியென்னைப் பலாத்காரஞ்செய்திடில் ஆச்சுது பெண்மழியே
சர்க்கரைக்கட்டிபோல்வள்ளிதெய்வயானையாங்தையலுனக்கிலையோ
இரண்டுதையலரைச்சாரும்பையலுனக்கென்னதானுமொருநிலையோ
அம்புவியிற்சிறுபெண்கள்மேலுனக்காசையேன்காணுதையா
ஆக்கபெருத்தாலு மாறப்பொருதவர் ஆகவே தேணுதையா
நம்பமண்ணுமலை தாசன பணியும் நளின மலர்ப்பாத கொஞ்ச
நாளைக்குமேலெவரு ஆசைக்கயர்கண்ணை ரொட்டினுலாகாதா (12)

## பாங்கி தலைவியின் நிலைமையைக் கூறித் தலைவியை யழைத்தல்

### வேறு

இராகம்-ஆனந்தபைரவி, ஆதிதாளம்

கண்ணுயிரம்படைத்த விண்ணூரிடங்தரித்த
கனவயிரப்படை யவன் மவளைச்சாரும் கர்த்தனே திருக்
கழுகுமலைப்பதி யனுதினமுற்றிலும் சுத்தனே
அண்ணுமலைக் கிடர்க ளண்ணுதொழித்துமிக
வகமகிழ்ந்தன கருணையளித்திடு மையனே திசை
யரவமும்வெட்டுற மயிலை நடத்திய துய்யனே
மின்னேகை மலமலர் பொன்னேவெனப்புகல
விகசிதரத்தின நகைசுடரிதரொளிற்மெய்பினுல் கதிங்
விகசிதரத்தின் வளையலடுக்கிய கையினுல்
என்னேரமும் மனதி லுன்மனதிலேசிந்தைகொண்
டெழுதியசித்திரமெனபவுனத்தினிலிருக்கிறுளவண்ணத்
திடுசிறபுத்தமுதினையும் மவறுததரு வருகிறுள
கும்பத்தினைச்சினந்து அன்பைநினைத்தெழுந்து
கொடியிடைமுற்றிலுமொடியவளைத் அங்கையை மனர்
குலவுகடப்பினில் நினைவதுவைத்தனள் மங்யே

செம்பொற் சிலம்புகள் புலம்பப் பெருந்தெருவிற் (உந்தன்
றிகழ்தரு சிற்றில்கள்புரிவதை விட்டவள் தியங்கினள்
மிருவழகைக் கருவிழியி லிருத்தியேமயங்கினள்
போராடுதற்குறிய கூரார் மலர்கணை யை
புகழ் பெருசித்தஜ தனுவதனைப் பொரு புருவத்தாள்
புரிபவரைக்தன கடியிலவிழப்புரி பருவத்தாள · (தவம்
சீராக நின்மனது பாராமுகமிலாது
திருவமுதக் கனியிதழை யமுக்கியே காரையா யிந்தத்
தெரிவையுளந் துணையலது பிடித்தவரா ரையா (13)

## தலைவி பாங்கியை தூது விடுதல்

### வேறு

இராகம் – தேசிகமுசாரி, அடதாளம்

பூமிமெசசிடு மண்ணுமலைக் கோர்துணை யானவன்
மயில்வாகனன் ஒரு கானவன் திணைப்
புவனத்தைக் காக்கும்வள்ளி
வனத்தைப் பார்க்க மெள்ளப் போனவன்
சேமமுற்றகழு காசலேசனையே தேடுதே
மனம்வாடுதே கால்கள் தள்ளாடுதே யிரு
செங்கை தங்கிநின்ற சங்கினங்கள் கழன்றோடுதே
தென்றலானபுலி வந்து கோபமொடு சீறுதே
தடுமாறுதே நிதங் கோறுதே நல்ல
தீமைமா மிருளிற் சோம னிலவு மீறுதே
குன்றமானபுயம் ரெண்டும் பூரிப்பைக் கொண்டாடுதே
தேகம்மண்டுதே வெப்பங் கண்டுதே மலர்க்
கொம்புபோல்மென் மருங்குலானதுந் துவண்டுதே
உள்ளமெல்ல மெல்ல முருகனென்றுநினைந் துருகுதே
முத்தங்கருகுதே கண்ணீர் பெருகுதே என்ற
னுச்சிக்கேறியமயல்பித்தங்கிறுகிறென்று வருகுதே
வள்ளமேவும் பசும்பாலுந் தேனுமரு வருக்குதே
கசந்திருக்குதே துன்பம் பெருக்குதே வன்ன
வாருந் தாறுமாய்க் கூறவேசோகமும் பருக்குதே
பாரமான சிந்தையோரம் வேடனம்பு பாயுதே
யுடல் தேயுதே மலர் தீயுதே கொடும்
பாவியானமதி யாவிசோரவந்து காயுதே
மாரவேளினுல் கோரமான தொழில் வாதையே
யெனுந் தீதையே தீரத் தூதையே சொல்லி
வாட்டந்தீர்க்கணைகூட்டிவாடியடி கோதையே (14

163959

பாங்கி தலைவியின் அவயவத் தருமை சாற்றல்

வேறு

இராகம் - கல்யாணி, ஆதிதாளம் - சாப்பு

சந்தவரை வந்தகுக நாதா பலர
யந்திர மனோன்மணியாள் பாதா
சண்முக சடாட்சரவி னோதா
குழைக்காதா சூரர் வாதா வன
சஞ்சரிவெண் குஞ்சரிச மேதா
செந்தமி ழுண்ணுமலையை யாளக்கொண்ட
கந்தா விந்தபலர்த் தாளா கட்க
சிந்திடி கடம்பணியுந் தோளா
நெடுநாளாமற வாளா உனை
சேரடோற்குயிற் பேடுறுவங்கள் கேளாய்
சுந்தரமி குந்தமிழன் மேகம் அவள்
சொந்தநுத லிந்துவில்லா பாகம் தும்
புருவம் வில்லொடுசி னேகம்
தவயோக வென்ற னேகம் வஞ்சகந்
துஞ்சிவிழி நஞ்சினிலும் வேகம்
கந்தபலி சின்றமுக விந்து வள்ளைத்
தண்டுசெவி யென்பதுவே தந்து கன்னம்
சாணிநுனு நாசியின்பதுவே சுந்து
மதுச்சிந்து தல்பெ ருந்து சிறு
சண்பகம் துப்பாமிழ்ச்சி வந்து
செங்குமுக புட்பமதை யொத்து மொழித்
தேனுலவும் வாய்நகையே முத்து கண்டஞ்
சீதரனூதுவர நத்து
சொறறித் தித்திப்பாகைக் கத்து. விடச்
செய்யுமென வுண்ணலாமு பத்து
குங்குமவா கங்கசசோ தண்டம் முன்கைக்
கோமரசவாழுவமை விண்டம் கையைக்
கோகனக யோவெமைவெ ருண்டம்
ஆழியண்டங் குவிக் கண்டம் நெடுங்
குங்கெளிறு சுறுகெலித் துண்டம்
கட்டுகதிர் பட்டுமணி வம்பு கிழி
பட்டுவிழி விட்டிடவே மூம்பு சிற
கட்டழகாம மட்டபுட்ட சொர்பு
யானைக்கொம்புசிவ சம்பு குடங்
கைக்கும்வளை யாதபொற் பாம்பு

வட்டமிழ் பசுந்துளப மாலே செங்கண்
வளரும் தவிசெனமோ ராலே சிறு
வயிறுமயிர் சிற்றெறும்பு போலே
விரைவாலே வெள்ள மேலே சுற்றி
வந்தசுரு யுந்தியிடை நூலே
தரம்புகள் பெண்ணுக்கின்ன மூண்டு தொடை
தங்கநிறச் செங்கதலித் தண்டு முழங்
தாட்குவமை கேட்கிலவை நண்டு
சினைகொண்டு வளர் பெண்டு வரால்
கணைக்காலெனு மிரண்டு
பாடுதராசுயர் குதிகந் துகமே யணி
பரவுபரவடி யிணைபுத் தகமே கடற்
பவளமதி தசவிரல்கள் சகமே
யம்பொருக் கேபுக யுகமே மயில்
பண்ணுமிளஞ் சாயலையா சுகமே
மேனகையோடுர்வசி இந்திராணி செல்ல மிக்க
திருமுக்ய கலை வாணி இந்த
மின்னரசி தன்னருவங் காணி
கெஞ்சுநாணி மலர் பாணி தலை
மீதுகுவித்து தொழுவார் பேணி
சேனைசோடு வந்துகருங் காவி யம்பைச்
செய்யகரும்புச் சிலைவைத் தேவி சண்டை
செய்யுமொரு ரூபமிலான் பாவி
எங்கடேவியிட மேவியுட லாவி தனைத்
தீர்க்குமுடங்காத்திடுவாய் மேவி (15)

---

## தலைவன் வருத்தஞ் சாற்றல்

இராகம் - பைரவி தாளம் – ஆதி

வன்னத்திணைமாலைவத் தெள்ளியே உண்ணும்
வாழ்க்கைக் குறக்குல வள்ளியே யுயிர்
வாங்கப் பிறந்திட்ட கள்ளியே யிரு
வடமேருவை நிகராகிய
புயமீதன்னி பலமாமணி
மாலைப்படியெனத் துள்ளியே விழ
வான்மதி வீசுந்தீ யள்ளியே
கன்னத்தினிற் குயிற் சத்தமே கேட்ட
கன்றதுபா றெந்தன் சித்தமே மயக்
கஞ்செய்யுதே யாசைப் பித்தமே யுடல்

கனலேறிய பெழுகாயினை
தினியாசிலு மடிபாதகி
கட்டாயம் நீயொரு முத்தமே தந்தால்
கைதொழு வேனுனை நித்தமே
வாடியிருப்பது வஞ்சமோ பொல்லா
வன்கருங் கல்லோவுன் நெஞ்சமோ கொண்ட
மையற் பயித்தியங் கொஞ்சமோ சிலை
மதன்சோதரி யெனைக்யாதரி
மனவாழ்க்கையில் சுகபாகிய
மார்க்க முனக்கென்ன நெஞ்சமே ஒரு
வார்த்தையுரைக்கவும பஞ்சமோ
தேடக்கிடையாத சொர்ணமே உயிர்
சித்திரமே மட வர்னமே அதோ
சிக்குது பால் தயி ரனமே பொரு
சிலைவேற்குற மகளாகுநின்
கயலாம்விழி யெனையேதுயர்
செய்வது கண்டில்லை யின்னமே
செய்தேனோ தான்பழி முன்னமே

தலைவனைக் கலந்த தலைவி பாங்கிக்கு கூறுதல்

இராகம்-பைரவி, தாளம்-சாப்பு

செந்தின்மாநகரந்தன்னில் மேவிய
தேசிகனுமொரு கேசன் மயில்
வாசிலேறுமுல் லாசன் சிறு
திங்களும்பணை பங்கைமரசுண
முந்திலங்கிய தங்கையாரோடு
செஞ்சீருடைய சிவனர் செவி
சேரமுன்னோதுப தேசன் அடி
யார்தமை யாளவிச வாசன்
எந்நேரமும் வந்தனை செய்தபடி
எண்ணும் அண்ணுமலை தாசன் றுதி
பண்ணும் மெஞ்ஞானவி லாசன் என்னே
டிந்தெழுந்து தயங்குமாலையில்
வந்துவண்டு முழங்குசோலையில்
இன்பசாகர மாகியநாடக
மன்புடனே செய்தான் மானே அந்தச்
சப்ரமென்ன கசால் வேனே

மங்கைமார்பல ரும்புடைசூழ்தர
மாமலர் கொய்திடச் சென்றேன் அங்கோர்
பூமரத்தே தனி நின்றேன் சந்த்ர
மண்டலங்களை வென்றவாகன
மைந்தொடொன்று மிகுந்துவார் மது
வாரமுந்தோன்றிடச் சேர்ந்தான் என்
சீலைப்பாரத்தேகளி கூர்ந்தான்
பங்கயாசன மேலுறைநான்முகப்
பாதகனுமலர்க் கைதான் கொண்டுன்
சோதியை யெப்படிச் செய்தான் அடி
பஞ்சுரனுஞ்சினு மஞ்சுசீரடி
கொஞ்சிரஞ்சித வஞ்சியேபுவி
பட்டுநீகிற்க வொண்ணுதென்று
பன்மலர் மெத்தயொன் றீட்டான் பின்பு
மென்மலரெந்தன் கைதொட்டான் (17)

வாவி வளம்

வேறு

கன்னல்சூழ்பழ னம்புடைசூழ் கழு
காசலந்தன்னில் வாழ்பிர தாபனே கன
வாபமெங்கும் கமழ்கின்ற நீபனே வள
காதலோடிரு போதிலும்பல
பேபாதினர்பணி வார்மனத்துறை
காரிருட்குவை நீங்கி நீபனே அதி
சூரபத்மனைத் தாக்கிய கோபனே
சென்னைமாநகர் வாழுமண்ணமலை
செப்புஞ் செந்தமிழுக்கதி ரேசனே சிவ
சுப்ரமண்ய னெனும்பிர காசனே கொடுஞ்
சிந்தைநைந்து புலம்பிநின்றிரு
மந்திரந்தனில் வந்தடைந்தனை
சேவிக்குங்குண மென்றெனக் காகுமோ மிகு
பாவிக்குந் துயரெப்படி மோகுமோ
வந்தவர்க்குப் பழம்புளிக்சாடியே
தந்திடச் சகியார் தமைத் தேடியே பிர
பந்தமெத்தனை யெத்தனை கோடியே சூலை
வாழையின்பழ மோகுனிந்திடு
மாழையின்கனி யோவெனும்படி
மதுரிதம்பெறவே நிதம் பாடியே மொரு
பரிசும் பெறுதுளம் வாடியே

வெக்தரைக்குள் வெளிப்பிடை பாலையே
சிந்து பித்தரைப்போல் வெறும் வேளையே செய்யும்
வீணன விளங்குன்றண்டைக் காலையெ எந்தன்
வேளையுந்துதி கூனவுந்துயர்
நீளுவேம்பவ மாதவம்புரி
வில்வமேனிசேற் கற்பகச் சோலையே (18)

தலைவியுன் ஊடல்

செந்தூர் வளர்முருக நாதா அருணேதய
செந்தாமரை நிகரும் பாதா எந்தன்
சிந்தையி லண்ணுமலைசெய்
நிந்தையை யெண்ணுதருள் செய்
சித்திர வேற்கரவி நோதா உனதுவஞச
செய்கையின்னமுந் தெரி யாதா
சந்தோஷமாகவே போய் வீடு வீடுதோறுஞ்
சரசங் கொண்டாடுவதே பாடு வந்துன்
நன்னுடனே சேர்பிரியத்
கன்னியர்கள் பேர்வரியச்
சகஸ்த்திரம் வேணுமோவெள் ளோடு தனித்தோரிடஞ்
தயங்கியே மேயுமேவெள் ளாடு
வேசையர் வாலிலே சென்று தம்பளங்களை
வெட்கமில்லாமல் வாங்கி மென்று தின்று
மெத்த ப்யித்தியங்கொண்டு
சுற்றித்திரிந்தே மருண்டு
வீடுதேடி வந்தாயே இன்று தொடவேமாட்டேன்
வேணுமென்றாலும் போடு கொன்று
ஆசைகொண்டவர்க்கு ரோஷங் கிடையாதென்பர்
அபபடிக்காதில்விசு வாசம் வகைக்கும்
அந்தவிலைப் பெண்டுவிலைச்
சொந்தமெனக் கொண்டனையே
யானுமுன்னைப்போலே மோசம் போனவருண்டோ
ஆருஞ் செய்கிறரோ பரிகாரம்
கந்தா செய்யாதே பல வந்தம் புதுமலரைக்
கசக்கியறிவார்களோ கந்தம் சற்றுங்
காதலிலாமற் சினந்தார்
கையை வலியப்பிடித்துக்
கசக்கினலாமோ சுகா நந்தம் எனக்கெங்கும்
கனவிலுமில்லையினி தொந்தம்
எந்தப்பிறப்பினுமே வள்ளி யுனையல்லால்
எவளையும் பாரேனென்று சொல்லி

எத்தனை பரத்தையாரா
நித்தமுநீ நந்தினையோ [குமரி
இப்படிக் காசிகாஞ்சி டில்லி கன்னியா
எங்குபார்த்தாலுமில்லை சல்லி [வைபவர்
கங்குகரையில்லையே ஜாடை சொல்லி
காட்டுகிறுயே பேதற் காடை மானற்
காக்கவல்லவா வென்பாலே
சேர்க்கையிலாதே யன்பாலே
கொத்தாயே வேசைமாதர் மேடை கைவசமா
கலப்புல்லுந் தின்னுலுமே காடை [மோ
குங்குமஞ் சந்தனஞ்சவ் வாது கஸ்தூரி
குங்குமென மீற புபத்தின் மீது வாசங்
கொட்டுதொழி னெற்றிசந்தப்
பொட்டொடு பகட்டுமிந்த
கோகிலம் புதிதாய்வந்த [தெல்லாங்
கோகிலம் புதிதாய்வந்த தேது நடந்த
கொஞ்சஞ்சொல்வாய் பண்ணுதே சூது (19)

## தலைவி வருந்துதல்

பாளைவாய கமுகில்வந்து வாளைபால் வாய்சூழ் செந்தூத
பாலனம் புரியவந்த புண்ணியா எந்த
காலையுஞ்செய்கிறுன் முன்பின்னெண்ணியர்
வேளையோ விடிந்துதையா நாளைவாரே னென்றுதையை
விட்டிடென்றுலும் விடாமற் பிடிக்கிறுய் பாலை
யொட்டவே மடுவரிந்து குடிக்கிறுய்
நித்தமும் அண்ணுமலைசெய்குற்றமெண்ணு வேலாகண்டோர்
நின்னிதழ்ப் பவழற்களில் வெள்ளையே தென்று
லென்சொல்வே ஞெருபெண் பிள்ளையே
மத்தநிகர் புயத்தின்மேலே மெத்தகர வாசைப்பட்டு
மாலையிலைற போலவெளி தோணுதே இது
கேலித்துரை யாருமென்று காணுதே
உன்னையும விவாகயல்லா வென்னையுமே அன்னைகண்டா
லொன்றுஞ் சொல்லிடாளோ அடா பாவியே நின்று
தன்றிடுவேனென்பாள் பச்சை நாவியே
சன்னல்சாடை யாகவெந்தன் றன்னைக்கண்டு போவீரென்று
சாற்றிடுவேனுண்மையான சொல்லையே வீட்டுக்
கூற்றுவன்போம் வந்நாயென்னதொல்லையே
சாருசேர் கரும்புருசி மாயிருந்தா லும்வேருேடு
தான்பறித்துத் தின்னுவது ஞாயமோ முழு
ஆண்பிள்ளைக் கிறுதான் சம்ப்ர தாயமோ

நூறு நூருயிரந்தரம் மாறிமாறி யேபிந்து
நோகுதே எந்தனுடைய உள்ளமே சித்தம்
போகுதே பலவாய் வந்தன் கள்ளமே (20)
நற்ருய் தஜைமகளின் வேற்றுமை கண்டு வினவுதல்
என்னடி நான்பெற்ற மங்கை இளங்கை விடல் சங்கை என்ன
இப்படியாயிற்றே செங்கை வளை
யிடர்பெற்றிட வுடைபட்ட்ண நடைகெட்டதுன் னுடையிற்பல
வெய்தினச் சந்தனப் புள்ளி என்ன
செய்தாயோ சொல்லடி கள்ளி
அன்னவயற செந்தூர்வாசன் மந்தகாசன் அன்பர்நேசன் நாளும்
அண்ணமலைக்கவி ராசன் பாடும்
அமுதுச்சுவை தருமுத்தமிழ் களபத்தோடு கமழ்போற்புய
அற்புதவேலன் செய் ஜாலய் தன்னல்
கற்பழிந்தாயோ விக் காலம்
சித்தசன் மெச்சிடு நாலையந்திமாலையோடுகாலைவைத்துச்
சிந்திப்ப தாச்சுதன் வேலை
சின்னத்தனமா வஞ்சியே யுன்லைப்பணிவோடு கெஞ்சியே
சேவற்கொடியோன் பூஞ் சோலை த்னில்
தேடியே வந்திட்டானே மாலை
மெத்தப்பிரமைகொண்டேங்கிமனமோங்கிநேசபாங்கிமாரை
விட்டுத்தனியாக நீங்கி வடி
வேலுக்கதிபதி யென்னியே மேலிட்டலறிய கன்னியே
வெட்கத்தைப் போக்கடித் தாயோ யிழி
வேசத்தனம் படைத்தாயோ
இன்னம விவாகமே யில்லை கமழ்கொல்லை வெடிமுல்லை சூழ
லெங்குஞ் சிங்காரித்து பில்லை சந்த
மினிதாகிய களபந்தனை தனமேரு விலனிகின்றனை
இப்படியே தலை விதியோ பெண்ணே
செப்படியோ யிது மதியோ
சத்தனமாகுமோர்பேயேபிடித்தாயேவேப்பங்காயேபோலச்
சாதம வெறுத்தாயே நீயே பெருஞ்
சண்டாளியே கண்டோர்திரள் கொண்டேபழி விட்டார்நம்
சாதிக்கெல்லாமொரு நடுவே வரத்
தான் பிறந்தாய் வந்து நடுவே
வண்ணப்பயிரவி தோடி ராகம்பாடி யுறவாட யுன்முன்
வந்துதினம்விளை யாடி எங்கும்
வளமைப்பெரு கழுகேசனின் பெருமைச்சொற் நினைவெனடி
வையத்திலிது உறியா அந்த
வாலைமகனுக்கும் வெறியா

எண்ணங்குமரவேல் பாலே சென்றதாலே யினிகேளே பழி
எப்படியுமுன்றன் மேலே வரு
மென்றேயெனதுள மஞ்சுது நன்றே சொல்லென வஞ்சக
மில்லைக் கிழவன் சொல் லிணக் காரர்க்
கேற்கா தென்று லுங்கண் ணுளை (21

---

## தலைவனிடத்தில் தலைவி வருந்துதல்

வேறு

மஞ்சுநிகர் குந்தள மின்ன சததளங்கள் விகசிதஞ்செய்
வாரிசாதனத்தில்வாழ் பொன்னே செய்ய
வன்னமேயொளிர் சொர்னமே பெற
வந்தகள லாரவஞ்சியே அதிவிருப்பத்குடனுரைக்கும்
வார்த்தையைக்கே ளாசைமிஞ்சியே
அஞ்சுவய தானபருவம தனிலெனது சிறுமணமும்
அங்கஜவேள் போலவுருவம் பெற்றே
அன்றுவந்து நயந்துமாலையி
னெஞ்சழிந்து மயங்கவே புரி
ஆறுமுக வேலலையே நினைவுகொண்டே மதிமருண்டே
ஆறுதில்லை யென்னவினையே
சென்னிகுல மேவியவாசன் அனியதுதியனுதினமுஞ்
செய்திடும் அண்ணமலைதாசன் பாடுஞ்
சிந்துமீது மிகுந்தநேசன்
றஞ்சுசீலகு வஞ்சரோருக [ளெல்லாம்
திவ்யமுகங்களாருமே கண்களிற்கண்டால் துண்பங்க
காதவழியோடிப் போகுமே (22

அண்ணமலை ரெட்டியார் இயற்றிய
காவடிச்சிந்து முற்றிற்று.

திருப்புகழ். குப்புசாமி முதலியார் பாடியது
வேறு சந்தம்

வங்கார மார்பிலணி தாரோடுயர் தோடசைய
கொந்தார மாலைசூழ லாரமோடு தோள்புரள
வன்காதி லோலைகதிர் போலவொளி வீசயிதழ் மலர்போல
மாஞ்சாடு சாபநுதல் வாலணைய வேள்விழிகள்
கொஞ்சார மோககிளி யாகநகை யேசியுற
மந்தாரை வாருதரு நீருறவே ஞசமையி விடுமாதர்

சங்காளர் சூதுகொலை காரர்குடி கேடற்கழற்
சிங்கார தோளர்பணி ஆசையுளார் காதியிலர்
சண்டாளர் சிச்சியவர் மாயவலை யோட்டியே யுழலாமல்
சங்கோதை நாதமொடு கூடிவெகு மாயையிருள
வெந்தோட மூல அழல் வீடுவுப தேசமது
கண்காதி லோதியிரு பாதமலர் சேர அருள் புரிவாயே
சிங்கார ரூபமயில் வாகன நமோநமென
கந்தாகு மாரசிவ தேசிக நமோநமென
சிந்தூர பார்வதி சுதாகய நமோநமென விருகோதை
சிந்தான சோதிகதிர் வேலவ நமோநமென
கங்காள வேணிகுரு வானவ நமோநமென
இண்சூர ராழிமலை தூள்படவேவேலைவிடு முருகோனே
இங்கீத வேதபிர மாவைவிழ மோதியொரு
பெண்காத லோடுலென மேவிவள்ளி நாயகியை
இன்பான தேனிரச மாரமுகை விடாதுகற மணிமார்பா
எண்டோளர் காதல்கொடு காதல்கனி யேபருகு
செங்காடு மேவிபிர காசமயில் மேலழகோ
டென்காதல் மாலைமுடி ஆறுமுக வாவமரர் பெருமாளே

---

## பஞ்சரத்தினத் திருப்புகழ்

மலடிவயிற்று மகன்போலே யொரு புதையிலெடுத்ததனம்
போலே யொளிர் வயிரமுலிதத களபபோலயிள் மூலைமானார்
வலியவணைத்த சுகமபோலேசதி யொளிவிடுரத்ன வடம்
போலே பரிமளமிகுபுட்பவனம்போல சுர நதிபோலே
ஆலைகடல் பெற்றிடு பெண்போல வரு புலவர் தமக்கிரு
கண்போலே கரையருகிலடுத்த சலம்போலே யுன தழகாமோ
அமுதுபுசித்த ரசமபோலே திரை கடன்மடை விட்டசலம்
போலே தின பதிசய மூத்தமி ழன்பாலே தனி னருடாரூய்
கலகலெனச்சொல்சிலம் பாசிர்பெருமலைமகள் பெற்றகுழந்
தாய் மாமத கரிமுகனுக்கொரு தம்பீகாணவர் மகளாமோர்
கடிமலர்மொய்த்தசுரும் போஞானிகண் மனதுருசித்த
கரும்போவானவர் கவலைதனித்தருளன் பேமாயவன் மருகோனே
சூளிசன்மகட்கொருகண்பாவேழிசையளிக்ள் சுவைத்த
கடம்பாபோய்வருகுரை கடலுக்கொருசம்பானுய்வருவடிவேலா
கொடிய பிணிக்கு மருந்தே தாள்பணியமரர் தமக்கு விருந்தே
தோகைகொள் குருகு நடத்து துரங்கா வேரக முருகோனே

வேணைவடித்துச் சொரிந்ததோ கொதி பாலுட னொக்கக் கலந்ததோ நல்சீனியிட்டுப் பிசைந்ததோ பல கனிகாமோ
தேடியெடுத்துப் பிழிந்ததோ நிறைபாகுபதத்திற் சமைந்த தோ விவை சேரவுருட்டத் திரண்டதோ நவ ரசமீதே
ஞானமூளைத்தும் சடர்ந்ததோவதிலே யெழுபுட்பச் சுகந்த மோமறைநாமள் வித்தைப்பிரசங்கமோ வைனவுரைநாவால்
நாவலர்மெச்சிப் பணிந்துதாழ்வு நீயெனைபெச்சிக் கனிந்து பேசவும் நானுனைமெச்சிப் புகழ்ந்துபாடவு மருடாராய்
யானைமதப்பட்டெழுந்தாமென வேயிருபத்மச் சதங்கை யோலிட வாறுமுகத்துக் குழந்தையாரு ளணைமார்பால்
ஆறுமூலைச்செப் பருந்துபாலுட ஞலுமலைக்கட சொரிந்து வாறென வாறு மூலைக்குட் சுரந்தபாலதி லமையாதே
சோணைமழைக் கொத்திருந்துலாவருகிர சமுத்ரத்தரங்கமே லெழு சூரியனெனக்கத் திரிந்துலாவிய புதல்வோனே
சோலைமலைக்குக் கடம்புபோலவிராலிமலைக்குக் கொழுந்து போலுயர் ஸ்வாமிமலைக்குக் கரும்புபோலவரு முருகோனே
வினையலைத்துத் தொலைத்துவிட்டொரு பிணியையடித் துத் துறத்திவிட்டெழு கவலைநெருப்பைத் தணிக்துவிட்டற
[நெறியாலே

கடினகசப்புக் கினிய்புவிட்டெனதுயரிலழுக்கைத்துடைத்து விட் டொரு கருணைமழைக்குட் குளிக்கவிட்டனி யலையாதே
அலையுமனத்தைப் பிடித்துவைத்த திலுறையுருட்டுக்கருக்க வைததேனை யடிமைபடைக்க கருத்துமுற்றிலு நினையாயோ
மலைமகள்பயப்பட் டொளிப்பதற்கொரு புகலிடமற்றுத் தவித்து நிற்கவும் வடவரைமிக்குச் சலித்திருக்கவு மதனுலே
குலவரைவிட்டுத் திசைக்களிற்றினையுடலைமிதித்துக்கிழித்த திற்சொறி குருதிகுடித்துப் பெருத்தசெப்பிள மூலையாளோர்
குறமகளைக்கைப்பிடித்துமற்றொரு துரைமகளைக்கைப் தடித்து மிக்குன குலகிரியைக்கைப் பிடித்திருக்குமெம் முருகோனேன்.

பஞ்சரத்தினத் திருப்புகழ்

முற்றிற்று.

163959

பார்ஸி ஜெகன்மோகன தி. குப்புசாமி முதலியார் பாடியது

## திருப்புகழ் வேறு சந்தம்

இசைந்தசூலம் கரியுரிபோர்வையும் எருல்நீருப்
இலங்குநூலும் புலியுடையாடையு வழுமாலுப்
அசைந்ததோளும் திங்களுமாலையு முடிமீதே
அணிந்தயீசன் பரிவுடனருளிய குருநாத
உகந்தசூரன் கிலேயுடன்வேரற முனிவோனே
உகந்தபாசக் கயிறொடுதூதர்கள் மெலியாதே
அசந்தபோதென் றுயர்கெதிமயில்மிசை வரவேணு
அதைந்தவேலும் புயமிமைமேவிய பெருமாளே

## மேற்படியார் பாடிய சந்தம்

கருவினுரு வாகிவந்து வயதளவிலே வளர்ந்து
தலைகள்பலவே தெரிந்து மதனுலே
கரியகுழல் மாதர்தங்க ளடிசுவடு மார்புதைந்து
கவலைபெரி தாகிநொந்து மிகவாடி
அரகரசிவாயவென்று தினமுநினை யாமனின்று
மறுசமய மீதிலொன்று மறியாதே
அசனமிடு வார்கடங்கள் மனைமடலை வாசனின்று
அனுதினமு நாணமின்றி யறிவேனே
உரகபட மேல்வளர்ந்த பெரியபெரு மாளரங்க
ருலகளவு மால்மகிழ்ந்த மருகோனே
சிபயகுல தீபவங்க விருதுகவி ராஜசிங்க
உரைபுகலி யூரிலன்று வருவோனே
பரமைமனை மீதிலன்று ஒருபொழுது தூதுசென்ற
பரமனருளால் வளர்ந்த குமரேச
பகையசுரர் சேனைகொன்று அமரர்சிறை மீளவென்று
பழனிமலை மீதினின்ற பெருமாளே

காவடிச்சிந்து

முற்றிற்று.

O-, 88MAR, 9
N62

ஸ்ரீனிவாசா அச்சகம். சூளை, சென்னை-7.